# தவக் காலத்தினுள் நுழைவோம்

கிறிஸ்து அலகையின் மூன்று சோதனைகளையும் வென்று வெற்றி வீரராகத் தன் பொது வாழ்வை ஆரம்பித்த நிகழ்ச்சியோடு தவக்காலத்திற்குள் எம்மை அடியெடுத்து வைக்க அழைக்கிறது தாய்த் திருச்சபை. கிறிஸ்துவின் சோதனைகளை நாம் சற்றே உற்றுப் பார்த்தால், சாத்தான் ஒரு பச்சோந்தி என்பது எமக்குப் புரியும். ஏனெனில், எமக்கு எது பிடிக்குமோ, அதைப் பயன் படுத்தி சாத்தான் எம்மைச் சோதிப்பான். எனவே எமக்குப் பிடித்தது பேயாக மாறி விடாமல் பார்த்துக் கொள்வது எமது கடமையாகும்.

எமக்கு கல்கண்டு பிடிக்கும் என்றால் சாத்தான் கல்கண்டாகத் தோன்றும். எமக்கு கருவாடு பிடிக்கும் என்றால் அது கருவாடாகத் தோன்றும். ஒருவருக்கு சாராயம் பிடித்தால் அது சாராய வடிவில் வரும். மற்றவருக்கு சண்டை சச்சரவு பிடிக்கும் என்றால் அது சண்டை சச்சரவாக அவர் முன் விளையாடும்.

சிலருக்குப் பணம் பிடிக்கும் என்றால் அது பணமாகத் தோன்றும். சிலருக்குப் பதவி பிடிக்கும் என்றால் அது பதவியாகத் தோன்றும். ஒருவருக்கு மண் பிடித்தால் பிசாசு மண்ணாக மாறும் (காண்க 1 அர 21). அவருக்குப் பெண் பிடித்தால் அது பெண்ணாக மாறும் (காண்க 2 சாமு 11-12). இவை அனைத்திற்க்கும் விவிலியத்திலும் சரித்திரத்திலும் எடுத்துக் காட்டுகள் பஞ்சமில்லை.

தவக் கால நோன்பு, செபம், பிறர்க்கீதல் ஆகியன மூலம் எம்மை நாமே மேற்கொள்ளப் பழகிக் கொள்கின்றோம். கோதுமை மணி போல் மண்ணில் விழுந்து பன் மடங்கு பலன் தரும் தெய்வீக சக்தியைப் பெறுகின்றோம். தெய்வ சக்தியுள்ள இடத்தில் தான் அருள் பொழிவு உண்டாகும். நீதி, அமைதி, மகிழ்ச்சி நிலவும். அதற்கு மாறாகப் பிரிவினையும் எம்மால் பிறருக்கு மனக் கலக்கமும் நிறைந்து நின்றால்,

"*பேய்களின் விருந்து மண்டபமாய்*
*உன் மனசு மாறியது எப்படி?*
*மூளையில் எப்போது*
*முள் முளைத்தது உனக்கு?*"

என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ளலாம். உலகம் புனிதமானது. ஏனெனில் அது கடவுள் படைத்தது. புனிதமான இவ்வுலகில் நாம் நடந்து செல்லும் பாதை சரியான பாதை தானா என்று உய்த்துணர, இத் தவக் காலம் எமக்குத் தரப் படுகின்றது.

"*நீ செல்லும் பாதை சரியான பாதை...*
*சிகரங்களில் வசிக்க சிங்காரமாய் நடந்து செல்*"

என்று விண்ணோரும் இறையடியாளர்களும் எம்மைப் பார்த்துப் புகழ, இக் காலம் பக்க பலமாக எமக்குத் துணை நிற்பதாக. ஆபத்து வரும் போது ஆமை ஐம்புலன்களையும் உள்ளே இழுத்துக் கொள்கிறது. அவ்வாறே ஐம்புலன்களை அடக்குபவர்கள் இம்மையிலும் மறுமையிலும் ஆனந்தமாய் இருப்பர், என்கிறார் வள்ளுவர்.

*ஒருமையுள் ஆமை போல் ஐந்து அடக்கல் ஆற்றின்*
*எழுமையும் ஏமாப்பு உடைத்து.* (குறள் 126).

இறைப் பாலகனில் அன்புடன்,

**Rev. Fr. Tiburtius Fernandez. SMA**